Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை (01-12 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 05

# மன்னாரில் கைப்பற்றிய பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்க மறுப்பு!

## ஸ்ரீலங்கா படை உயரதிகாரி இராணுவ நீதிமன்றின் முன்

கொழும்பு, டிசம்பர். 1

மன்னாரில் ஸ்ரீலங்கா இராணுவம் கைப்பற்றிய பிரதேசத்தை தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படி இராணுவ உயர்பீடம் விடுத்த கட்டளையை ஏற்க மறுத்த படை உயரதிகாரி ஒருவர் அவரது பொறுப்புகளில் இருந்து உடனடியாக விடுவிக்கப்பட்டு இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

இராணுவ உயர்பீடத்தின் இந்த முடிவை ஆட்சேபித்து மேற்படி உயரதிகாரிக்குக் கீழ் பணிபுரிந்த சிப்பாய்கள் கொதித்தெழுந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் அண்மையில் படையினர் மீட்ட பிரதேசத்தை தொடர்ந்து, கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படி இராணுவ உயர்பீடம் கட்டளையிட்டதாகவும்—

ஆனால் அப்படிச் செய்ய இயலாது என அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான அதிகாரி மறுத்துவிட்டார் என்றும் — ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மீட்கப்பட்ட பிரதேசத்தைக் கட்டுப்பாட்டில் வைத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் பரவலாக ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் பரவலாக படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

பலாலி, மாதகல், மண்டைதீவு, பூநகரி — கல்முனை, காரைநகர் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினரே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மண்டைதீவுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு ஏவப்பட்ட ஷெல்கள் சிறுத்தீவு, அரியாலை, பூம்புகார் கரையோரம், மூளத்துவாரம், குருநகர் கரையோரம் ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

பூநகரி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் சாவகச்சேரி கடற்கரைப் பகுதியில் பயங்கர சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

மண்டைதீவு கடலேரிப் பகுதியில் ரோந்து சுற்றிய கடற்படைப் படகில் இருந்து பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டது. (உ-3-15-17-51)

## கட்டுவன் பகுதியில் கடும் சண்டை!

### விடாது ஷெல் முழக்கம்!!

வலி. வடக்கில் கட்டுவன், குறுத்தலவிளான் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையில் அடிக்கடி மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுவன் முகாமிலிருந்து நேற்று அதிகாலை ஒரு மணி முதல் சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். முகாமிலிருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது.

ஷெல், துப்பாக்கித் தாக்குதல்களினால் வலி. வடக்குப் பகுதி நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

ஏழாலை வடக்கு, தெல்லிப்பளை, அம்பனை, துர்க்காபுரம் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. பல வீடுகள் சேதமுற்றன; தெய்வாதீனமாக உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. (உ-3-5-15-17-45-68)

## படையினர் சூட்டுக்கு ஏழாலையில் பெண் காயம்

யாழ்ப்பாணம், டிச. 1

கட்டுவன் இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 8 மணிக்கு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம்பெண் ஒருவர் காயமுற்றார்.

ஏழாலை வடக்கில் உள்ள தமது வீட்டில் இருந்தபோது அவரைச் சன்னம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்ற திருமதி விஜயகுமார் ஜெகதாதேவி (வயது 22) யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். (உ-15-17)

## அநுராதபுரம் பகுதியில் விமானக் குண்டு வீழ்ந்தது!

கொழும்பு, டிச. 1

கடந்த மாதம் 16 ஆம் திகதி அநுராதபுரம் மீதாக பறந்து சென்ற இலங்கை விமானப்படை போர் விமானம் ஒன்றில் இருந்து குண்டு ஒன்று நுவரவெவா பகுதியில் வீழ்ந்தது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறினர் என்று "த ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

பறந்து சென்று கொண்டிருந்த போர் விமானத்தில் இருந்து தற்செயலாக அக்குண்டு விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அக் குண்டு வெடித்ததா இல்லையா என்ற விவரத்தை அப் பத்திரிகை வெளியிடவில்லை.

இதே வேளை—

அநுராதபுரம் விமான நிலையத்திற்கு அருகில் விமானப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் தொன் அரிசி அடுத்த வாரம் வரும்

யாழ்ப்பாணம், டிச. 1

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் "குமாரி" கப்பலில் ஆயிரம் மெற்றிக் தொன் "சோறா" அரிசி எடுத்து வரப்படவிருக்கிறது.

இக் கப்பலில் 950 மெற்றிக் தொன் மா, 450 மெற்றிக் தொன் சீனி, 30 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு, 10 மெற்றிக் தொன் வாசனை வகைகள் மற்றும் 825 பரல் மண்ணெண்ணெய் ஆகியவையும் எடுத்து வரப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன் தீவுப்பகுதி மக்களுக்கு தேவையான 400 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன.

இக் கப்பலில் யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கு பொருள்கள் எடுத்து வரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## யாழ். மாவட்ட அகதி முகாம்களை ஐ. நா. பொறுப்பேற்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் நீங்குவதற்கு அந்த முகாம்களை அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் பொறுப்பேற்க வேண்டும்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

இணையத்தின் 8 ஆம் ஆண்டுப் பூர்த்தியை ஒட்டி இணைய அலுவலகத்தில் நேற்று மாலை கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 247 அகதி முகாம்களிலும் தங்கியுள்ள மக்கள் சுகாதார வசதியின்றியும், போசாக்கு இன்றியும் இன்னற் படுகிறார்கள். அவற்றை நீக்கும் வகையில் அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் முகாம்களை பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

இங்குள்ள அகதி முகாம்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுப்பது இணையத்துக்குச் சிரமமாக உள்ளது — என்றும் கலந்துரையாடலின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளை சந்தித்து நேரடியாக இக்கோரிக்கை சம்பந்தமாக பேசி, மகஜர் சமர்ப்பிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. (அ-3)

## சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலுமா, முடியாதா?

### அரச சுகாதார அமைப்புகளிடம் கேள்வி

யாழ்ப்பாணம், டிச. 1

இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளைப் போக்குவதற்குத் தம்மால் இயலுமா, முடியாதா என்பதை யாழ் மாவட்டத்தில் இயங்கும் அரசாங்க சுகாதார அமைப்புகள் உடனடியாகப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

—இவ்வாறு ஆக்ரோசமான முறையில் கேள்வியும் கோரிக்கையும் எழுப்பியுள்ளனர் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள்.

இணையத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பலரும் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்கள்.

பிரதிநிதிகள் பலரும் பின்வரும் விடயங்களை முன்வைத்தனர்—

★ யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்கள், மலசலகூட வசதியின்றியும், குடிதண்ணீர் வசதியின்றியும், போசாக்கான உணவு இன்றியும் அவதிப்படுகின்றனர் பலவித ஆபத்தான நோய்களுக்கு ஆளாகும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் படகில் வந்த பல்கலை. மாணவர் சிக்கினர்?

யாழ்ப்பாணம், டிச. 1

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 8 மணியளவில் கிளாலிக் கடலில் கடற்படையினர் நடத்திய தாக்குதல் காரணமாகக் காணாமற்போன ஆறு படகுகளில் ஒன்றில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இருந்ததாக அறியப்படுகிறது.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆலங்கேணியிலிருந்து தனியாக ஒரு படகை வாடகைக்கு அமர்த்தி வந்தனர் என்றும்—

கடற்படையினர் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அந்தப் படகில் இருந்த மாணவர்களும், படகோட்டிகளும் கடலில் குதித்து விட்டனர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. கோமாரியில் புதிய விமானத் தளம்

கொழும்பு, டிச. 1

யுத்த நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு, மட்டக்களப்பு மாவட்டம் — கோமாரியில் புதிய விமானத் தளம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கோமாரியில் விமானத் தளம் ஒன்றை பிரிட்டிஷார் நிறுவினர்.

இத் தளத்தை மீண்டும் ஸ்ரீலங்கா விமானப் படையினர் புனரமைப்புச் செய்து தற்போதைய யுத்தத்துக்கு உபயோகிக்க இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கான ஆரம்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

# திறப்பு விழாவும்

“ ராக பாவம் ”

# நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 06-02-93 — 08-02-93

திறப்பு விழா 06-02-93 சனிக்கிழமை

நிதியுதவி நிகழ்ச்சி

முதலாம் நாள்:

07 — 02 — 93 ஞாயிறு
மாலை 5 தொடக்கம் இரவு 10 வரை,

நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினர்
நாட்டியக் கலைமணி எம். அருள்மோகன்
(பரத நாட்டியம்)
மெல்லிசை வாணர் ஜி. சாந்தன் குழுவினர்
எழுச்சிப் பாடல்கள்

இரண்டாம் நாள்:

08 — 02 — 1993 திங்கள்

நாதஸ்வர இரட்டையர்கள்
வி. கே. கானமூர்த்தி — பஞ்சமூர்த்தி குழுவினர்
இசைக் கச்சேரி
இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம்
இசையமைப்பாளர்
கண்ணன் வழங்கும்

## ‘இன்னிசை வார்ப்புகள்’

மெல்லிசை நிகழ்ச்சி

(முன்னணி மெல்லிசைக் கலைஞர்கள் சாந்தன், பௌசி, வர்ண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம், மிதிலா விவேகானந்தன்.)

நுழைவுச் சீட்டு:

நாள் ஒன்றுக்கு 500/-, 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

[சி 3919]



# LONDON ACCOUNTANCY CLASSES

MAY — JUNE 1993

★ C. I. M. A. – Stage II
★ I. A. B. – Found
– Inter
– Finals


ஆரம்பம்: 05-12-1992

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**
14, St. Peter's Lane,
Hospital Road, Jaffna (சி/3822)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 18 — 12 — 1952

மறைவு: 02 — 11 — 1992

## அமரர் குமாரசாமி தவராஜலிங்கம் (லிங்கம்)

(வரணி மகாஜன வித்தியாலயம் ஆசிரியர்)

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய், பொறுமையின் பொக்கிசமாய் வாழ்ந்த குடும்பத்தின் ஒளிவிளக்கே உங்கள் நினைவால் வாடும் வேளையில் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01-12-92) காலை நடைபெறும் அந்தியேட்டியிலும் நாளை (02-12-92) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை, தாய், மனைவி, மகன்,
சகோதர, சகோதரிகள்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு. (23455)


# இன்று

தென்மராட்சி, டிச. 1

பளை வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை ஆரம்ப பிரிவு மாணவர்களின் பொருட்காட்சியும் பரிசளிப்பு விழாவும் காலை பத்து மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

[உ-117]

★ ★ ★

யாழ்ப்பாணம், டிச. 1

வேலையில்லாப் பட்டதாரிகளின் கலந்துரையாடல் ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் பட்டதாரி பயிலுநர் பரீட்சைக்குத் தோற்றிப் புள்ளிகள் கிடைக்கப் பெறாதவர்களின் விவகாரம், கொட்டகலையில் நடக்கவுள்ள பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ள அனுமதிக் கடிதம் கிடைக்காமை ஆகியவை குறித்தும் இக்கருத்தரங்கில் ஆராயப்படும். (அ)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், டிச. 1

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கு அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான 25 வீத சம்பளக் கொடுப்பனவுகள் இன்று முதல் கன்னாகத்தில் உள்ள தற்காலிகப் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சுகாதாரத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

★ கடந்த இரு வருடங்களாக அரச சார்பற்ற நிறுவனங்கள் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து வருகின்றன. அரசாங்க சுகாதாரப் பகுதியினர் தமக்குரிய கடமையை முற்றாகக் கைகழுவி விட்டனர். முகாம்களில் சுகாதாரத்தைப் பேணுகல் அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பே என்று கைவிட்டு விட்டனர்.

★ அரச சார்பற்ற நிறுவனங்கள் தனியே அந்தப்பணிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.

★ அரச சுகாதார அமைப்புகள் சுகாதாரம் பேணும் பணிகளை முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். இல்லையேல் அரச அதிபர் தலைமையில் கூடி, எந்தளவு பணியைத் தம்மால் செய்யமுடியும் என்றாவது அறிவிக்க வேண்டும்.

★ அவ்வாறு அறிவிப்பின் மிகுதியான பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளமுடியும்.

★ அரச சுகாதாரப் பிரிவுகள் சுகாதார — போஷாக்கு பணிக்கு அரசின் உதவிகளை எந்தளவுக்குத் தாம் பெறமுடியும் என்பதை அறிவித்தால், எமது தலைமையகம் மூலம் மிகுதியைப் பெற முயற்சிக்க முடியும். (அ-3)

## மன்னாரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்க ஆள் பலம் மற்றும் ஆயுதப் பலம் இல்லை என அந்த அதிகாரி சுட்டிக்காட்டினாராம்.

ஆயிரத்து 100 சிப்பாய்கள் இருக்க வேண்டிய தமது அணியில் 700 சிப்பாய்களே மிஞ்சியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்ததற்காக படை பொறுப்பதிகாரி பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார்.

படை அதிகாரி இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவுள்ளதை அறிந்து அவரின் கீழ் பணியாற்றிய ஏனைய அதிகாரிகளும் மற்றும் சிப்பாய்களும் கொதித்தெழுந்தனர். என்றும் —

இராணுவ உயர்பீடத்தின் இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவர்கள் அனைவரும் தமது பதவிகளைத் துறந்து படையை விட்டு வெளியேறத் தயாரான தாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சம்பந்தப்பட்ட படை அதிகாரி அவர்களைச் சாந்தப்படுத்திக் கடமைக்குத் திரும்புமாறு கேட்டுக் கொண்டதாகவும் ஏ [illegible] திலும் [illegible] தெரிவித்தன. (உ-6)


டிரக்டர் (இழுபொறியந்திரமும் பெட்டியும்)

## வாடகைக்கு அமர்த்துதல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

மேற்படி இழுபொறியந்திரமும் பெட்டியும் 01 - 01 - 93 தொடக்கம் 31 - 12 - 93ந் திகதி வரையிலான காலப் பகுதிக்கு வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள் 15 - 12 - 92ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை, பதிவுக்கட்டணம் ரூபா 25/-ம் வைப்புப்பணமாக ரூபா 100/-ம் செலுத்துவதன் பேரில் 11 - 12 - 92ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

செல்வி. தனுஜா தணிகாசலம்.
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
26 - 11 - 93 (சி-2523)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## புளோறன்ஸ் நைற்றிங்கேல் பதக்கம்

போர்க்காலத்திலோ அல்லது சாதாரண காலத்திலோ நோயாளர்களை மிக உன்னத முறையில் பராமரித்துக் காப்பாற்றியுள்ள ஆண்/பெண்/தாதி/தொண்டர் ஒருவரைக் கௌரவித்தளிக்கப்படும் இப்பதக்கத்தைப் பெறத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் போதிய ஆதாரங்களுடன் விண்ணப்பதாரிகள் வதியும் உதவி அரசாங்க செஞ்சிலுவைப் பிரிவுகளின் செயற்குழுவுக்கு 05 - 12 - 92 க்கு முன் அனுப்பப்படல் வேண்டும். பிரிவுகள் கிளைத் தலைமையகத்திற்கு இவற்றைத் தகுதியானால் 10 - 12 - 92 க்கு முன் அனுப்பி வைக்கும். யாழ். மாவட்டத்தில் தகுதியானவரை கிளை நிர்வாக சபை தெரிவு செய்யும்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
30 - 11 - 1992. (சி/3921)



## யாழ்வட்ட லியோ கழகம்

நடாத்தும்

ரசிகர்களின் அபிமான உதைபந்தாட்ட வீரர்

# தெரிவுப் போட்டி-1992

உதைபந்தாட்ட ரசிகர்களே!

ரசிகர்களின் அபிமான உதைபந்தாட்ட வீரர் யார்?
தெரிவு உங்கள் கைகளில்!
நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவுதான்

★ கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் ஒன்றில் விண்ணப்பப் படிவங்களை வாங்குங்கள்.

★ போட்டி விதிமுறைகளுக்கு அமைய அவற்றைப் பூர்த்தி செய்யுங்கள்.

★ கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் ஒன்றில் உள்ள பெட்டியில் போடுங்கள்.

தெரிவு செய்யப்படும் 3 அபிமான வீரர்களுக்கும், அவர்களைச் சரியான முறையில் தெரிவு செய்யும் உங்களில் மூவருக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள:

1. குறிஞ்சி மெடிக்கல்ஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி
2. நியூ லலிதா ஜுவல்லர்ஸ், 74/1, கஸ்தூரியார் வீதி
3. நியூ ஆனந்தன், 167, ஸ்ரான்லி வீதி
4. ரவி மோட்டர்ஸ், 245, ஸ்ரான்லி வீதி
5. வசந்தா பார்மஸி 280, ஆஸ்பத்திரி வீதி
6. ஜெயா அழகு சாதன மாளிகை, 177ஏ, மின்சார நிலைய வீதி
7. சாவேரி சில்க்ஸ், 48, பெரியகடை
8. சிவசக்தி வைத்திய நிலையம், கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி, அரியாலை
9. றாஜு ஸ்ரோர்ஸ், 67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்.
10. மெடி எய்ட்ஸ் பார்மஸி, 644, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்.
11. குவின்ஸின் ஸ்ரார் பேக்கரி, பாண்டியன்தாழ்வு
12. பரீஸ் ஹோட்டல் & கூல்பார், காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை
13. ஜெனி கபே, 415, கடற்கரை வீதி, குருநகர்
14. அந்தோனிப்பிள்ளை குணசிங்கம் கபே, 40A, கடற்கரை வீதி, குருநகர்
15. நாதன் ஸ்ரோர்ஸ், நாவாந்துறை
16. அஜந்தாஸ் புடைவை மாளிகை, 25, 4ஆம் குறுக்குத் தெரு யாழ்.
17. சண்முகன் வர்த்தக நிலையம், குளப்பிட்டிச் சந்தி, K. K. S. வீதி, யாழ்.
18. லக்ஷறி சென்றர் (Y.M.C.A.) கண்டிக் குளி, யாழ்ப்பாணம்
19. எழிலகம், யாழ்ப்பாணம்
20. தாரகை புடவை மாளிகை, பலாலி வீதி, திருநெல்வேலி
21. பேபி போட்டோ, பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
22. பண்டியாம்பிள்ளை புத்தகசாலை, 390, பிரதான வீதி, யாழ்.
23. நாவாந்துறை சந்தை முன்பாக
24. எஸ். வி. முருகேசு, 158, ஸ்ரான்லி வீதி, யாழ்
25. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, K. K. S. வீதி, யாழ்.

(23460)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டில் இருந்து வரும்
# அகதிகள் மீது கட்டுப்பாடு;
# ஐரோப்பிய சமூகம் ஆராயும்

கொழும்பு, டிச. 1

அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் வழிவகைகள் பற்றி ஐரோப்பிய சமூக அமைச்சர்கள் மாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

லண்டனில் நடைபெறும் இம்மாநாட்டில் — ஆதார மற்ற அரசியல் புகலிடம் கோரும் விண்ணப்பங்களைக் கட்டுப்படுத்துவது பற்றியும் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குடியேற்றத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

அகதி அந்தஸ்துக் கோருவதற்குரிய விதிகளைக் கட்டுப்படுத்துவது, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட அகதிகளை திருப்பி அனுப்புவது உட்பட பலயோசனைகள் இம்மாநாட்டில் பரிசீலனை செய்யப்படவுள்ளன.

இம்மாநாடு நேற்று ஆரம்பமாகவிருந்தது இன்று (செவ்வாய்)டன் இம்மாநாடு முடிவடையவுள்ளது. (த-எ)

## கொழும்பு வீடுகளில் வெளியார்;
## பதிவு செய்யாதோர் மீது வழக்குத் தாக்கலாகும்

கொழும்பு, டிச. 1

கொழும்பு மாநகரில் வீடுகளில் தமது குடும்பத்தார் தவிர்ந்த வேறு ஆட்களை வைத்திருப்போர் பலர் அது பற்றிய விபரங்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யத் தவறி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதைத் தவிர வேறு வழி தங்களுக்கு இல்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (த-எ)

## தீ விபத்தில் காயம்

யாழ்ப்பாணம் நகரத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற தீ விபத்து ஒன்றில் கணவனும் மனைவியும் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆறுமுகம் (வயது 38) அருந்ததி (வயது 27) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

மேசையில் இருந்த லாம்பினைக் கட்டுண்டு கீழே படுக்கையில் விழுந்த போது இந்த தீ விபத்து ஏற்பட்டது.

## தமிழ் - முஸ்லிம் கட்சிகள் இணைந்தாலே நல்ல தீர்வு!
## கொழும்பு பிரதி மேயர் சொல்கிறார்

கொழும்பு, டிச. 1

தமிழ்க் குழுக்களும், தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டால் நிச்சயம் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும்.

கொழும்பு மாநகர பிரதி மேயர் திரு. சே. கணேசலிங்கம் வவுனியா ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைத் திறப்பு விழாவில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வல்லமை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு மட்டுமே உள்ளது இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணுவதற்காக அவரும் அவரது அரசாங்கமும் இரவு, பகலாகச் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார். (த-எ)

## பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு, டிச. 1

கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பொலீஸ் நிலையங்களின் பாதுகாப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)


வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது!!

சங்கீதம் வினா-விடை (ஆண்டு 10-11)

★ க. பொ. த. சாதாரணதரப்பரீட்சை, வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளில் உச்சப் புள்ளிகளைப் பெற உதவும் வழிகாட்டி;
★ கடந்த கால வினாக்களைத் தழுவி ஆக்கப்பெற்றது.
★ இராகலட்சணங்கள், இசைக்குறிப்புகள், இசை மேதைகளின் வரலாறுகள் கொண்டது.

ஆக்கம்: செல்வி 'அநோ'

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விற்பனையாளர்
ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்,
[23443]

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
முக்கிய அறிவித்தல்

1983 ஆம் ஆண்டுக்குப் பின் கொக்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரியால் நடத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர்களுக்கான உயர்தர, சாதாரண தரப் பரீட்சையை பூர்த்தி செய்யாத பயிற்சியாளர்களுக்கு விசேட பரீட்சை ஒன்றை நடத்த சபை நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே பரீட்சையில் தோற்ற விரும்புவர்கள் 20 - 12 - 1992க்கு முன் சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

- செயலாளர்.

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-3917)

நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

கல்வியாண்டு - 93

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 05-12-1992 (சனி)

விஞ்ஞானம்
இராஜ செல்வவடிவேல்
கணிதம்
இந்திரன்
காமதேவன்
கோகேஸ்வரன்
தமிழ்/சமயம்
பண்டிதர்
சந்திரவதனன்
யோகராணி

சமூகக்கல்வி
வேலா
சிவநேசன்
நிர்மலா
ஆங்கிலம்
மகாலிங்கம்
ரவி
தர்மலிங்கம்
ரமேஸ்
வர்த்தகம்
நவம்
[இ-3788]

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

O/L - 93
ஆண்டு 10, 9

புதிய பிரிவுகள்

ஆரம்பம்:
05 - 12 - 92
(சனி 3-00மணி)

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம்— | | தயாநிதி |
| கணிதம் | — | கதிர் |
| ச. கல்வி | — | கியூபேட் |
| தமிழ் | — | பிரதீபன் |
| வர்த்தகம் | — | ஸ்ரீ |
| ஆங்கிலம் | — | சனீ |

(இ-3812)

கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்
(இ-3914)

யாழ். வட்ட லியோ கழகம்
நடத்தும்
சோபனா ஆடை அகம் ஆதரவிலான
வலைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1992

மேற்படி சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் கழகங்கள் 10-12-1992க்கு முன் விண்ணப்பிக்கவும் விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்

1. சோபனா ஆடை அகம், பெரியகடை, யாழ்.
2. குறிஞ்சி பார்மஸி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
3. 82, புங்கன்குளம் வீதி, அரியாலை.

- யாழ். வட்ட லியோ கழகம்.
(23461)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ பொருளியல் ★
திரு. க. கலாகரன்

94 பிரிவு I 11 — 12
94 பிரிவு II 9 — 10 ஆரம்பமாகின்றது.
93 பிரிவு I 10 — 12
93 Day Classes பிரிவு I 8-00 — 9-30
93 Day Classes பிரிவு II 9-30 — 11-00
[இ-3820]

YARL HALL
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 1993
ஆண்டு 5 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்: 05 — 12 — 1992
சனிக்கிழமை 3-00 மணி

ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | S. காமதேவன் |
| தமிழ் | — | S. கதிர்காமத்தம்பி |
| சமூகக்கல்வி | — | S. குணசிங்கம் |
| வர்த்தகம் | — | A. அகிலன் |
| ஆங்கிலம் | — | T. சௌந்தரபாண்டியன் |

[23432]

உதை பந்தாட்டம்
யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள்
எதிர்
யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள்
காலம்: 01 — 12 — 1992 மாலை 4-30 மணி
இடம்: பிக்னெல் மைதானம்
அனைத்து பழைய மாணவர்களையும் அழைக்கிறோம்.

தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
[இ-3815]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கலண்டர்கள்

வியாபார இந்தனையா? விளம்பரம் பற்றிய யோசனையா? மூன்று விதமான அழகிய ஓவ்செட் கலண்டர்கள் உங்கள் விளம்பரத்திற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது. இன்றே எம்மை நாடுங்கள்! ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [23355]

### புலமைப்பரிசில் வகுப்புகள்

1993 புலமைப் பரிசில் வகுப்புகள் 5ஆம், 4ஆம் ஆண்டுகளுக்கு ஆரம்பம்: 01-12-92 [செவ்வாய்] பிற்பகல் 3-00 மணிக்கு. பொ. சுப்பிரமணியம், 164, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [23430]

### இலவச திருமணசேவை

27 வயது, பூராடம், செவ்வாய் 4, I. C. M. A. கணக்காளருக்கு [கொழும்பு வீடு உண்டு] தகுந்த மணாளன் தேவை. நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [23445]

### வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்கு கொடுக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். 'அனெக்ஸ்' ஆக கொடுக்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். இல. 466, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [23436]

### மணமக்கள் தேவை

ஆண் 34 வயது [12 இல் செவ்வாய், கிரகபலம் 20] எக்கவுண்டனுக்கும், பெண், 40 வயது [4இல் செவ்வாய் கிரகபலம் 17] கணித ஆசிரியைக்கும் மாற்றாகவோ தனியாகவோ செய்யப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [23449]

ஆண், 40 வயது [4இல் செவ்வாய், சதயம், கிரகபலம் 14] வங்கி மனேஜருக்கும் பெண், 43 வயது [1இல் செவ்வாய், ஆயிலியம், கிரகபலம் 36] கம்பியூட்டரோடு வேலை செய்பவருக்கும் தனியாகவோ, மாற்றாகவோ செய்யப்படும். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [23448]

R. C. 32வயது கனடா மணமகனுக்கும், செவ்வாய்க் குற்ற மற்ற 42 வயது போஸ்மாஸ்டர் பெண்ணுக்கும், U. K. இல் வசிக்கும் 7 இல் செவ்வாய் 25 வயது B. Sc. பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [23450]

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணமக்கள் எல்லா உத்தியோகத்திலும் இருக்கிறார்கள். உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் (23451)

## எய்ட்ஸ் தினம் இன்று

உலக எய்ட்ஸ் தினம் இன்று டிசம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. [ஓ]

# கலை, வர்த்தக கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## ஆண்டு 9, 10, 11 பிரிவுகள்

சனி, ஞாயிறு } 1-00—6-00

செவ், வியா: } 3 00 - 6-00

எமது ஆசிரியர் குழு:

விஞ்ஞானம் — திரு. இரா. செல்வவடிவேல்

கணிதம் — திரு. நிமலநாதன்

சமூகக்கல்வி — திரு. வேலா

தமிழ் — திரு. ஞானதிருக்கேதீசன்

ஆங்கிலம் — திரு T சௌந்தர-பாண்டியன்,

ஆரம்பம்:

05-12-1992

1-00 மணி

[இ-3804]

வெளிவந்துவிட்டது!

# அறிவுக் களஞ்சியம்-6

இந்த இதழுடன் முதல் 6 இதழ்களுக்கான பொருளடக்கமும் உண்டு.

[இ-3816]

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல் - 1993

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட இறைச்சிக் கடைகளை 1993ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 1993ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனவு செய்வதற்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் 08 - 12 - 1992 முற்பகல் 10 00மணிவரை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அவ்வவ் உப அலுவலக பொறுப்பதிகாரிகளால் 07 - 12 - 1992ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.


மேலும் கேள்விகள் தொடர்பாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செ. ஸ்ரீநிவாசன்,
விசேட ஆணையாளர்,

வடமராட்சி தெற்கு மேற்கு-
பிரதேச சபை,
நெல்லியடி, கரவெட்டி,
23 - 11 - 1992

[இ-3912]

# இரண்டாம் ஆண்டு நினைவு



## சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

[சிங்கம் இன்டஸ்றீஸ் பங்காளர்]

மலர்வு: 04-08-1958

மறைவு: 24-11-1990

திதி: 01-12-1992

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காயும், சமூகசோதியாயும், சுற்றத்துக்குக் கொழுகொம்பாயும் நீங்கள் வாழ்ந்து, பணிசெய்த பசுமை நினைவு எம் மனத்தை விட்டு அகலாது. உங்களை வணங்குகின்றோம்.


மனைவி, மக்கள், தாய்,
சகோதரர், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

'சிங்கம் இன்டஸ்றீஸ்',
1029/3, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(23407)

# ••••• நினைவஞ்சலி •••••

4ஆம் வருடம் | 3ஆம் வருடம் | 151ஆம் நாள்







அமரர்
**சின்னத்துரை குணரட்ணம்**
(பிரபல வர்த்தர்,
மரக்காலை உரிமையாளர்,
வாகன முகவர்-அரசாங்க
ஒப்பந்தகாரர்)
அன்னையின் மடியில்: 27 — 01 — 1956
ஆண்டவன் அடியில்: 01 — 12 — 1988
திதி: 17 — 12 — 1992

செல்வி
**சின்னத்துரை சித்திரவதனி**
(வெளிவாரி
கலைப் பட்டதாரி
மாணவி)
அன்னையின் மடியில்: 23 — 11 — 1966
ஆண்டவன் அடியில்: 22 — 12 — 1989
திதி: 19 — 12 — 1992

அமரர்
**சின்னத்துரை தர்மலிங்கம்**
(பாக்கியம்
தோட்டப் பங்காளர்)
அன்னையின் மடியில்: 07 — 10 — 1947
ஆண்டவன் அடியில்: 03 — 07 — 1992

சேமன் குடும்பத்தில் செழிப்பாகத் தோன்றிய இதயங்களே!
குணம் குணம் என அழைத்திடும் குன்றாச் செல்வமே
போற்றுபவர்கள் போற்றட்டும் தூற்றுபவர்கள் தூற்றட்டும்
நாம் செல்லும் வழி நேர்வழி ஆகட்டும் எனக்கூறிய
குணமாக இருந்த எங்கள் குணக்குன்றே
இடி விழுந்த வாறாக இதயம் நோக
நயவஞ்சகரின் சூழ்ச்சியால் அந்தோ!
பெரும் மலை சரிந்ததே சடுதியாக
உனது பிரிவுத்துயரைக் கேட்ட நாள் தொடக்கம்
உனது தங்கை சித்திராக் குட்டியும்
அனல் விழுந்த புழுப்போல துடி துடித்து
தனது வாழ்க்கையை அணு அணுவாக சாகடித்து
குறுகிய காலத்தில் பாசப்பிணைப்பை பிரிக்க
முடியாதவாறு பாச மலராகிவிட்டாள்
அச் சோகக் கண்ணீர் வற்று முன்பே
இறைவன் மீண்டும் சோதித்து விட்டாரே!
தாய்க்கு தாயாக வளர்த்த அன்னை கலங்கி நிற்க
உங்களை வாழ வைத்த உடன் பிறப்புக்களுடன்
ஒன்றாகி விட்ட குலம் அண்ணாவே
விண்ணிழந்த மதிய மென விண்ணுமகால்
வீடு வெறிச் சோடி நிற்க
கொடிய அரக்கனின் பொம்மர் குண்டு
வீச்சுக்கு பலியாகினாயே!

அன்புத் தெய்வங்களே உங்கள் மூவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களது பிரிவால் துயறும்,

**திருமதி சின்னத்துரை நாகம்மா குடும்பத்தினர்.**

"விண்ணுமகால்",
[illegible]

[23433]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யார் சொல்லி என்ன?

தென்னிலங்கையின் அரசியல் நிலை குறித்து இப்போது பலவிதமான விமர்சனங்களும் ஆய்வுகளும் அதிகமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்துக்கு இராணுவ ரீதியாகப் பெரும் தோல்வி ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இறக்கும் படையினரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிக்கிறது. பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கானோர் படையை விட்டு நாளாந்தம் ஓடுகின்றனர். இவ்வாறாகத் தோல்வி நிலை மேன்மேலும் மோசமடைவதால் இனப் பிரச்சினைக்கு அவசரமாக ஒரு தீர்வைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது— இவ்வாறு ஆய்வாளர்கள் தமது விமர்சனங்களில் தெரிவித்துள்ளனர்.

இது உண்மையான நிலையாக இருக்கலாம் அதற்கான சகல சாத்தியங்களும் உள்ளன. இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதற்கு மூல காரணம் வடக்கு-கிழக்கில் அரசாங்கம் விம்புக்கு நடத்தி வரும் போர் என்பதை இப்பத்தியில் பல தடவைகள் துலாம்பரமாக எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

சரிந்து போகும் பொருளாதாரத்தை நிமிர்த்தி நிறுத்துவதற்கு கொழும்பு அரசுக்கு வெளிநாட்டு மூலதனம் நிரம்பத் தேவைப்படுகிறது. ஆனால் அரசு நினைத்ததுபோல் வெளிநாட்டு வளங்களைத் திரட்ட முடியாத அளவுக்குப் புலிகளின் உபாயங்கள் தடுத்து வருகின்றன. பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்கவும் முடியவில்லை; வெளிநாட்டு வளங்களைத் திரட்டவும் நடங்கல்கள் உள்ளன என்ற திரிசங்கு சொர்க்க நிலையில் அரசாங்கம் திண்டாடுகிறது.

ஆகையால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே. ஆனால் தீர்வு ஒன்றைக் காண்பதில் கொழும்பில் அரசாங்க, எதிரணித் தரப்புகளிடையே கருத்து முரண்பாடு நிலவுவதாக அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

அந்தக் கருத்து முரண்பாடுகளை நீக்கி, வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கான அமைதி முயற்சியைப் பேணாவிடில் நாட்டில் பயங்கரமான நிலைமை உருவாகும் என்றும் அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, தமக்கிடையேயான கருத்து முரண்பாடுகளை நீக்கிக்கொண்டு, சிங்களத் தலைவர்கள், தமிழர் பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைக்காண முன்வருவார்கள் என்பது சந்தேகம்.

அப்படிச் சொல்வதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன ஒன்று: தமிழர்களை அடக்கி ஆளவேண்டும் என்ற ஆதிக்க மனோநிலை சிங்களவர்களிடம் இருந்து இன்னும் நீங்கவில்லை. இரண்டாவது: தமிழர் பிரச்சினைக்கான தீர்வைக் காணும்போது ஒரு சாரார் அரசியல் லாபம் பெற அனுமதிக்கக்கூடாது என்று மறுசாரார் கண்ணும் கருத்துமாக இருப்பது;

தென்னிலங்கை அரசியல்வாதிகளைப் பிடித்துள்ள இந்த இரண்டு நோய்களும் தீரும் வரை அவர்கள் இனப் பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைத் தமக்கிடையே கண்டு பிடிப்பார்கள் என்பது சந்தேகமே; சாத்தியமில்லை; ஆகையால் அரசியல் ஆய்வாளர்கள், அவதானிகளின் எச்சரிக்கை இவர்கள் காதில் விழுமா என்பதும் சந்தேகமே, தனது தலையில் தானே மண் அள்ளிப்போட நினைக்கும் ஒருவன், எவர் புத்தியையும் கேட்கமாட்டான். அந்த வகையினரே சிங்களத் தலைவர்கள்! இதற்கு மேல் எதனைச் சொல்வது?

## கிளிநொச்சியில் குழாய்க் கிணறு

யாழ்ப்பாணம் டிச 1

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல்லவராயன்கட்டு, சுண்ணாவில் ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளின் நன்மைக்காக இம்பாலட்ட சர்வோதய இயக்கத்தினரால் இரு குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (இ-162)

# கிழிந்த பண நோட்டுக்கள்; மக்கள் வங்கி நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். மாவட்டத்தில் பழுதடைந்த, கிழிந்த நோட்டுக்களுக்கு பதிலாக புதிய நோட்டுக்களை பாவனையில் விடுவதற்கு மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

குறைந்த மதிப்புள்ள நோட்டுக்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலும்—

பெரும்பாலான நோட்டுக்கள் கிழிந்து பழுதடைந்ததாலும்—

ஒரு தொகை புதுநோட்டுக்களை கப்பல் மூலம் எடுத்து வந்து புழக்கத்தில் விட மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாக மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தன் தெரிவித்தார். (த-3)

## ஹிஸ்புல்லா மீது நடவடிக்கை முஸ். காங்கிரஸ் கைவிட்டது

கொழும்பு, டிச 1

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. ஜனாப் ஹிஸ்புல்லா மீதான ஒழுங்கு நடவடிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் கைவிட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாப் ஹிஸ்புல்லாவை காங்கிரஸில் இருந்து இடைநிறுத்தி வைப்பது என்றும்—

இரு வாரங்களுக்குள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்கத் தவறின் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவரைக் கட்சியில் இருந்து வெளியேற்றுவது என்றும்— கட்சித் தலைமைப்பீடம் முன்னர் முடிவுசெய்திருந்தது.

இப்போது ஜனாப் ஹிஸ்புல்லா காங்கிரஸ் தலைமைப் பீடத்திடம் மன்னிப்புக் கோரியிருப்பதால் அவரை மீண்டும் முஸ்லிம் காங்கிரஸில் சேர்த்துக் கொள்வது என்று தலைமைப்பீடம் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 2,000 ஆவது ஆண்டில் சகலருக்கும் "பங்கர்"

### சுதந்திரக் கட்சி எம். பி. கிண்டல்

"இரண்டாயிரமாவது ஆண்டில் சகலருக்கும் வீடுகள் என அரசு கூறிவருகிறது. ஆனால் இப்போது இரண்டாயிரமாவது ஆண்டில் எல்லோருக்கும் "பங்கர்கள்" என்று கூறும் நிலையே உருவாகியுள்ளது.

—இப்படிக் கூறினார் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மகிந்தராஜபக்ஷ.

அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

"பிரபாகரன்தான் இன்று எல்லாவற்றையும் நிர்ணயிக்கிறார்" என்றும் அவர் கூறினார். (உ-3)

## 'குமாரி' வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், டிச 1

பருத்தித்துறையில் தரித்துள்ள 'குமண' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்குவது தாமதமாவதால் 'குமாரி' கப்பல் வருவதும் தாமதமடைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கால நிலை சீரில்லாததாலும், பொருள்கள் இறக்கும் "பாஜ்"கள் சேதமடைந்துள்ளதாலும், 'குமண' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்குவது தாமதமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வார இறுதியில் பொருள்கள் இறக்கும் வேலைகள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

அதன்பின்னர் அடுத்த வாரமளவில் "குமாரி கப்பல் இங்கு வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்பட்டது (த-3)

## எழுதுநர்களை நியமிக்க தலைமையகம் நிபந்தனை

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளுக்கு எழுதுவினைஞர்களை நியமிக்க மக்கள் வங்கித் தலைமையகம் நிபந்தனை விதித்துள்ளதாக தெரியவந்தது.

யாழ் மாவட்டத்தில் உள்ள வங்கியின் கிளைகளில் உள்ள 22 வெற்றிடங்களையும் நிரப்புவதற்காக 22 பேரின் விபரங்கள் யாழ். அரச அதிபரால் மக்கள் வங்கித் தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட 22 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமானால் அவர்கள் கொழும்புக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் —

யாழ்ப்பாணத்தில் நியமனம் வழங்குவதாக இருந்தால் தற்காலிகமாகவே நியமனம் வழங்க முடியும் என்றும் — மக்கள் வங்கித் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் இவர்களுக்கு ஜனவரி முதல் நியமனம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-3)

## வட-கிழக்கு விவசாயிகளின் வருமானம் லட்சக் கணக்காம்

### துணை அமைச்சர் சொல்கிறார்

வடக்கு-கிழக்கில் சாக ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட விவசாயிகள் லட்சக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கின்றனர்; தெற்கில் உள்ள விவசாயிகளால் ஏன் அப்படி உழைக்க முடியாதிருக்கிறது?

கடற்றொழில் துணை அமைச்சர் எம். எஸ். கலைதி கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு கேள்வி எழுப்பினார். (த-எ)

## 1 கோடி 20 லட்சம் பேருக்கு எய்ட்ஸ் நோய் பீடிப்பு

கொழும்பு, நவ. 1

உலகில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு கோடி 20 லட்சம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் ஐயாயிரம் பேருக்கு எச். ஐ. வி. வைரஸ் தொற்றி வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

உலக எய்ட்ஸ் தினம் இன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மாத்திரம் மாதாந்தம் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றிய நான்கு பேர் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர் என்று எய்ட்ஸ் நோய்க்கட்டுப்பாட்டு இயக்கப் பணிப்பாளர் டாக்டர் காமினி ஜயகுரு தெரிவித்தார்.

இதுவரை 62 பேர் எச்.ஐ.வி வைரஸினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது

எய்ட்ஸ் நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 19 ஆகும்.

எச். ஐ. வி. வைரஸ் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது வேகமாகப் பரவி வருகின்றது. இந்த வைரஸினால் பீடிக்கப்பட்ட நிலையில் மேலும் 2 ஆயிரத்து 500 பேர் இருக்கலாம் என்றும் டாக்டர் ஜயகுரு தெரிவித்துள்ளார். (உ-எ)

## இந்தியப் பிரதமர் ராவ் இன்று தமிழகம் விஜயம்

தமிழகத்தில் புயல், வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இன்று பகல் 12-40 மணிக்கு விசேட விமானம் மூலம் சென்னைக்கு விஜயம் செய்கிறார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் புதுச்சேரி முதலமைச்சர் திரு. வைத்திலிங்கமும் பிரதமருடன் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவார்கள்.

அதன் பின்னர் பிரதமர் கேரளம் செல்கிறார். அங்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் கருணாகரனுடன் அவர் பார்வையிடுவார்.

### சிறப்பான வரவேற்பு

தமிழகத்திற்கு இன்று (செவ்வாய்) விஜயம் செய்யும் பிரதமர் நரசிம்மராவுக்குச் சிறப்பான வரவேற்பளிக்கும்படி காங்கிரஸ் தொண்டர்களை, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி கேட்டுக் கொண்டிருக்கிறார். (த-எ)

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 1

அறிமுகமில்லாதவர்களிடமிருந்து பொருள்களைப் பாரம் எடுக்க வேண்டாம்.

இப்படி வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களை மட்டக்களப்புப் பொலிஸார் கோரியுள்ளனர்.

வானொலி மற்றும் டெலிவிஷன்களைக் கொண்டு வருபவர்களை அடையாளங்கண்ட பின்னரே அவற்றைப் பாரம் எடுக்கும்படியும் பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

## அராலிக் கடற் பகுதியில் கடற்படையினர் ரோந்து

அராலிக் கடற் பகுதியில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவும் கடற்பிராந்தியத்தில் தரித்திருந்த கடற்படையினர் கடற்றொழிலுக்கு சென்றவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்;

இது போன்ற சம்பவங்கள் கடந்த சில நாட்களாகத் தொடர்வதாகவும் இக்கடற் பிராந்தியத்தில் தொழில் செய்யும் மீனவர் தொழிலை மேற்கொள்ள முடியாது தினமும் வெறுங்கையுடன் திரும்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (இ-15)

## இலங்கையில் நிலவும் நெருக்கடி குறித்து உலகத்துக்கு நினைவூட்ட வேண்டும்

### செஞ்சிலுவை சமமேளனச் செயலாளர்

கொழும்பு, டிச. 1

சோமாலியாவிலும் யூகோஸ்லேவியாவிலும் ஏற்பட்டிருப்பதைப் போன்ற புதிய நெருக்கடிகள் காரணமாக, இலங்கையில் உள்ள நெருக்கடி குறித்து உலகிற்கு நினைவுறுத்த வேண்டிய தேவை ஒன்று இருக்கின்றது.

செஞ்சிலுவை பிறைச் சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் திரு. ஜீன் பீ. கேலி முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கேலி தற்போது கொழும்பு வந்துள்ளார்.

"இலங்கை நெருக்கடி குறித்து நினைவுறுத்தும் தேவை உள்ளது— சர்வதேச மனிதாபிமான உதவி தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் [illegible] இச் செய்தி [illegible] பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது. (த-எ)

## அயோத்திப் பிரச்சினை: நரசிம்மராவ் அரசுக்கு தி. மு. க. முழு ஆதரவு

சென்னை, டிச 1

அயோத்தி இராமர் ஆலயம் தொடர்பான பிரச்சினையில் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு கடைப்பிடித்து வரும் நிலைப்பாட்டுக்கு முழு ஆதரவளிக்கப் போவதாக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது

இத்தகவலை தி.மு.க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

அயோத்தி இராமர் ஆலயப் பிரச்சினையில் பாரதிய ஜனதா கட்சியின் கொள்கையை ஆதரித்து தமிழக முதலமைச்சரும் அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா அண்மையில் புதுடில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் பேசியதாகச் செய்திகள் வெளியானமை தெரிந்ததே.

அதன் பின்னரே தி. மு. க. தலைவர் முன்கண்ட அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

### விசாரணை முடியவில்லை

கொழும்பு, டிச. 1

சீனன்குடா குண்டு வெடிப்புச் சம்பவம் மற்றும் 'வை-8' விமானம் ஒன்று இயக்கச்சியில் சுட்டு வீழ்த்தப்பட்டமை ஆகியவை தொடர்பான விசாரணைகள் இன்னும் முடியவில்லை.

பிரதமர் டி.பி. விஜேதுங்கா அண்மையில் நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர்தான் அவை பற்றிய அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதா, இல்லையா என்பது பற்றி அரசாங்கம் தீர்மானிக்கும் என்றும் அவர் கூறினார். (உ-எ)

### அநுராதபுரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) படையினரால் அழித்து விடப்பட்ட குண்டுகளில் ஒன்று கடந்த 26 ஆம் திகதி வெடித்தது. இதுவும் விபத்துச் சம்பவம் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான விமானத் தாக்குதல்களை நடத்த அநுராதபுரம் விமானத்தளத்தை பிரதான தளமாக விமானப்படையினர் தற்போது பயன்படுத்தி வருவதாகவும் 'தஜனிட்' செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவை அதிகாரியுடன் யாழ். அரச அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், டிச. 1

யாழ். உணவு நிலைமை, கப்பலில் இருந்த பொருள்களை இறக்குவதில் உள்ள இடர்ப்பாடுகள் ஆகியவை குறித்து கொழும்பில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தாம் எடுத்துக் கூறவிருப்பதாக, இப்போது இங்கு விஜயம் செய்துள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. டொமினிக் டுவோர் யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

திரு. டுவோர் நேற்று யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரைச் சந்தித்துப் பேசினார்.

அச்சமயம் யாழ். உணவு நிலைவரம் பற்றியும் பருத்தித்துறை இறங்கு துறை தொடர்பாகவும் அரச அதிபர் அவருக்கு எடுத்துக் கூறினார்.

பயணிகள் கப்பல் சேவை குறித்தும் இப் பேச்சுக்களின் போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. [உ-எ]

# கொழும்பில் தற்கொலை செய்த சிவகுமார் வீட்டிலிருந்து வரைபடம் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிச. 1

இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் வாசஸ்தலத்துக்குச் செல்லும் பாதையைக் காட்டும் வரைபடம் ஒன்றை தற்கொலை செய்து கொண்ட சிவகுமார் தங்கியிருந்த விஜராம மாவத்தை வீட்டின் அறை ஒன்றில் இருந்து பொலீஸார் கண்டு பிடித்தனர்.

பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

சிவகுமார் என்ற இந்த வாலிபர் பார்க்வே பிளேஸில் உள்ள — காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் ஹிறில் மத்தியூவின் — வீட்டில் வைத்து தன்னிடம் உள்ள கைக்குண்டு ஒன்றை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டார் என்பது தெரிந்ததே.

அச்சம்பவத்தின்போது அந்த வீட்டில் உள்ள எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## வெளிநோயாளர் பிரிவில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிச. 01

யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பகுதியில் பனடோல், அம்பிசிலின், பெனிசிலின் போன்ற மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

நோயாளர்கள் இம்மருந்து வகைகளை வெளியிடங்களில் உள்ள மருந்துக்கடைகளில் வாங்கி வருகின்றனர்.

# தபால் பெட்டிகள் திருத்தம்

வண்ணார்பண்ணை, டிச. 01

யாழ். பிரதம தபாலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வீதிகளில் உள்ள பாவனைக்கு உதவாத 17 தபால் பெட்டிகள் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

இதே போன்று குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் பழுதடைந்த தபால் பெட்டிகள் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் —

இத் தபால் பெட்டிகளில் தபால்களை அச்சமின்றிப் போடலாம் என்றும் வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் திரு. எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார். [இ-162]

# 30மீனவர்களுக்கு கடன்

யாழ்ப்பாணம், டிச. 1

மன்னார் மாவட்டத்தில் புனர்வாழ்வு நிவாரணத் திட்டத்தின் கீழ் 30 தமிழ் மீனவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கிக் கிளைமூலம் மீன்பிடி வலை கொள்வனவு செய்யவும், மீன்பிடி வள்ளம், மோட்டார் வாங்கவும் இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்தில் இருந்து 2 லட்சம் வரையில் இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கில் புனர்வாழ்வு நிவாரணத்திட்டத்தின் கீழ் முதல் தடவையாக மன்னார் பகுதி மீனவர்களுக்கே கடன் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [த-8]

# ரூ. 6 கோடி 60 லட்சம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 1

"யாழ். மாவட்டத்தில் கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணம் வழங்க ஆறு கோடி 60 லட்சம் ரூபா அவசரமாகத் தேவையாகவுள்ளது."

வவுனியாவில் நடந்த வாராந்த புனர்வாழ்வு, புனரமைப்பு கூட்டத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு ஆளுநர் திரு. நளின் செனவிரத்தின தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அணிப்பாளர் திரு. பத்மநாதன் இக்கோரிக்கையை விடுத்தார்.

இந்தக் கோரிக்கை குறித்து எதிர் வரும் 4 ஆம் திகதி கொழும்பில் நடக்கும் புனரமைப்பு, புனர்வாழ்வு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் —

அந்தக் கூட்டத்துக்கு யாழ். அரச அதிபர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் — கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

## கிளாலியில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் —

படகில் இருந்த மாணவிகள் கடலில் குதிக்காமல் அப்படியே இருந்ததாகவும் அவர்களுக்கும் படகுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை எனவும் — கூறப்பட்டது.

மாணவர்களும், படகோட்டிகளும் கரை சேர்ந்ததாகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

ஞாயிறு அதிகாலைத் தாக்குதலின் போது மூன்றுக்கு மேற்பட்ட படகுகள் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சனிக்கிழமை இரவு 9மணியளவில் கிளாலிக் கடலில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று சாமான் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாகவும் ஆறு படகுகள் காணாமற் போனதாகவும் அறிய வருகிறது. காணாமற் போன படகுகளில் இரண்டு கரை ஒதுங்கியதாகவும் அறியவந்தது.

இந்தச் சம்பவத்தில் கடலில் பாய்ந்து நீந்தி வந்த படகோட்டிகளில் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார்.

இச் சம்பவத்தில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த இருவரது இரண்டு படகுகள் சேதமடைந்ததாக கிளாலியிலிருந்து [illegible] கொண்டனர்.

[இ-15-11?-51-27]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயமணி பெஞ்ஜமின்

நவாலியை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பில் வசித்தவருமான திருமதி ஜெயமணி பெஞ்ஜமின் 26-11-92 இல் மட்டக்களப்பில் காலமானார்.

இவர் R. பெஞ்ஜமினின் அன்பு மனைவியும், றெக்ஸ் சாலிறதனி (Bank of Ceylon), ரவி (Commercial Bank, Jaffna.), பிரபு, டிம்பிள் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் மட்டக்களப்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரவி பெஞ்ஜமின்
(மகன்)

சோமசுந்தர புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(23459)

## இளையதம்பி ஐயம்பிள்ளை

செல்வபுலம், வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 298, 5ஆம் யூனிற் இராமநாதபுரம் கிளிநொச்சியில் வசித்து தற்போது 17, அச்சுக்கூட ஒழுங்கை தலையாளி, கொக்குவிலில் வசித்து வந்தவருமான இளையதம்பி ஐயம்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (மீன்பிடிக் கூட்டுத்தாபனம்), பரராசசிங்கம் (இராமநாதபுரம்), சிவராசா (கிராமசேவையாளர், கிளிநொச்சி), கமலாதேவி, கோகிலாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அ. ஸ்ரீஸ்கந்தராசா (மீன்பிடிக் கூட்டுத்தாபனம்), நா. சர்வலோகநாதன், சாந்தா, தவலட்சுமி, வனிதா (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்.) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1992-12-02 ஆம் திகதி புதன்கிழமை 10-00 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்,
ஐ. சிவராசா (மகன்)

கொக்குவில்.

(23453)

## திருமதி அன்னப்பிள்ளை கனகரட்ணம்

(வசாவிளான்)

வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி க. அன்னப்பிள்ளை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனாயன் பென்சனர் திரு. கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு, திருமதி சேனாதிராசா, பரமசிவம், திருமதி பரம்ஜோதி, பரஞ்சோதி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-11-1992 ஞாயிற்றுக்கிழமை தொல்புரத்தில் உள்ள மகன் பரமசிவத்தின் இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. பரமசிவம்
(மகன்)

தொல்புரம் மேற்கு,
சுளிபுரம்.

(23457)

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

மலிவு! மலிவு!!

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு 01-12-92 தொடக்கம் 31-12-92 வரை எமது வாடிக்கையாளர்கள் சகல விதமான புடவைத் தினிசுகளையும் தைத்த ஆடைகளையும் மலிவாகவும் விசேட கழிவுடனும் பெற்றுக் கொள்ளலாம்.

லேய்டன் புடவை நிலையம்
இல. 249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3824)

தேவை

மேற்பார்வையாளர் (Nutritionist)
போசாக்கு புனர்வாழ்வு நிலையம்

கொக்குவிலில் அமைந்துள்ள குழந்தைகளுக்கான போசாக்கு புனர்வாழ்வு நிலையம் ஒன்றிற்கு மேற்பார்வையாளர் (NUTRITIONIST) தேவை.

தகைமைகள்

1. B. Sc Nutrition உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தைகளின் போசாக்கில் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட தாதிமார் அல்லது உதவி வைத்திய உத்தியோகத்தர்கள் முதலானோரும் விண்ணப்பிக்கலாம்.
2. பெண்களாக இருத்தல் வேண்டும்.

நீங்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் 9-12-92ற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
போசாக்கு புனர்வாழ்வு நிலையம்
37, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(23456)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14 | 18 |
| 12 | 11 |
| 1942 | 1990 |

## ப. தாச்சாயனி

உருண்டோடியது இரண்டு ஆண்டுகள்
அமைதி இழந்தோம் நாங்கள்
கலங்கரை விளக்காக நின்றீர்கள்
கண்காணா தூரம் சென்றீர்கள்
கரைகாணா கலம் ஆனோம் நாம்
காரிருள் படிந்தது நம் வாழ்வில்
பாடுபட்டீர்கள் பிள்ளைகள் பயன்பெற
பலன் அடையும் வேளையில் பகல் நிலவானது
நம் நல்வாழ்வு

விழுதுகளின் விருட்சத்தில் ஆறுதல் அடையாமல் - பாசத்தின் சுமையோடு பறந்துவிட்டீர்களே! ஆண்டு 100 ஆனாலும் ஆறாது நம் கண்ணீர்!

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பின் கணவர், பிள்ளைகள்,
சகோதரர், மருமக்கள், உறவினர்.

22/A4, விதானையார் வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வை. பரமசுந்தரம்
சரவணை கிழக்கு,
வேலணை.

(23458)

# மரண அறிவித்தல்

## தம்பு சிவலிங்கம்

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும், ஊர்காவற்றுறை பட்டினசபை மின்சாரப் பிரிவின் முன்னாள் ஊழியருமான தம்பு சிவலிங்கம் யாழ்ப்பாணம் தட்டாதெருவில் நேற்றிரவு காலமானார்.

இவர் மங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், மாலதி, ஸ்ரீதரன், (ஜேர்மனி), ஸ்ரீபவன் (பிரான்ஸ்), மைதிலி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ந. சோமசேகரம் (வீரகேசரி - கொழும்பு), ரஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருந்தா, சாரங்கன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில் — கே. கே. எஸ். வீதி 846 ஆம் இலக்கத்தில் உள்ள இல்லத்தில் — இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ஸ்ரீகாந்தன்
(மகன்)

846, கே. கே. எஸ் வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] த்தில் உள்ள அச்சகத்தில் 01-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org